*ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2026*
*ஆண்டு - 6 (Year 6)*

*1/09/2015 - 31/08/2016 பிறந்தவர்கள்*

*(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)*

*போட்டி நடைபெறும் திகதி 21/11/2026*

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது*

**அன்னை அன்பு**

*"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது முது மொழி. எம்மை இந்த உலகிற்கு ஈந்து அன்புடன் அனைத்தையும் தந்து வளர்ப்பவர்கள் எம் பெற்றோர்.*

*எம்மைப் பத்து மாதம் சுமந்து பல்வேறு கஷ்டங்களையும் தாங்கி எம்மைப் பாலூட்டிச் சீராட்டி உயர்ந்த பண்புகளையும் ஊட்டி வளர்ப்பவள் அன்னை. அன்னையின் அரவணைப்பில் பாலராக, பிள்ளையாக வளரும் நாம் பெரியவர்களாக வளர்ந்து பெரு வாழ்வு வாழும் போது பெற்றவர்களைப் பேணுபவர்களாக வாழ வேண்டும்.*

*மாத, பிதா, குரு, தெய்வம் என நால்வரையும் போற்றும் நாம் தாய்க்குத் தான் முதன்மை வழங்கியிருக்கிறோம். பிள்ளைகள் தம்மைப் பெற்றவர்களையும் அவர்களின் கடமைகளையும் காலம் செல்லச் செல்ல மறந்து விடப் பார்க்கிறார்கள். அவர்கள் உயிர் வாழும்போதே எம்மைப் பெற்றதால் கிடைத்த மகிழ்ச்சியை நாம் எம் பெற்றோருக்குக் கொடுக்க வேண்டும்.*

*"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா" என்ற பாடல் வரிகளில் தான் எத்தனை உணர்வு? பிள்ளைகளாகிய நாம் செய்யும் குற்றங்கள், குறும்புகள் எல்லாவற்றையும் சகித்து தனக்கான கருணை உள்ளத்துடன் எம்மை ஆதரித்து வளர்க்கும் தாயன்புக்கு நிகர் யாது? எனவே மாதாவை ஒரு நாளும் மறக்காமல் அவர்களின் ஆசியுடன் நல்லவராக, வல்லவராக, சான்றோனாக நன்றியுடன் வாழ்வோம் என்று கூறி எனது உரையை முடிக்கிறேன்.*